# பாலித்தீவில் இந்துப்பண்பாட்டுப் பரவலும் அதன் செல்வாக்கும்

மு. கிருஷா[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*உலகிலுள்ள மிகப்பழமையான சமயங்களில் இந்து சமயம் முதன்மையானது. கடவுளர், வழிபாடு, நம்பிக்கைகள், பண்பாடு, கலை, தத்துவ சிந்தனைகளால் உலக சமயங்களில் முன்னிலை வகிக்கின்றன. பண்டைக்காலம் முதலாகவே இந்தியாவுக்கும் தென்னாசிய, தென்கிழக்காசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் காரணமாக இந்துப்பண்பாடும் அதனோடு இணைந்த கூறுகளும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்து வருவதாயிற்று. குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பூர்வீகமானவை எனினும் சோழர் காலத்திலேயே அவ்வுறவுகள் எழுச்சியடைகின்றன. இந்தோனேசியத் தீவுக் கூட்டங்களில் ஒன்றாக விளங்கும் பாலித்தீவில் இந்துசமயமும், அதன் பண்பாட்டுக் கூறுகளும் பெற்ற வளர்ச்சியினை இனங்காண்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். இந்த ஆய்விற்கான முதன்மை மூலங்களாக தென்கிழக்காசிய இந்துப்பண்பாடு தொடர்பாக வெளிவந்த நூல்களும் துணை மூலங்களாக தென்கிழக்காசிய இந்துப்பண்பாடுகள் தொடர்புடைய இணையதளங்கள், கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் வரலாற்றியல் ஆய்வு, விவரண ஆய்வு, பகுப்பாய்வு முதலான ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாலித்தீவில் இந்துசமயத்தின் தோற்றம், வளர்ச்சி, இந்து அரசியல் முறைமை என்பவற்றை விளக்குவதற்கு வரலாற்றியல் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாலித்தீவில் இந்துசமயத்தின் செல்வாக்கு எத்தகையது என்பதை விவரிப்பதற்கு விவரண ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாலித்தீவின் இந்துசமயத்தின் வளர்ச்சிப் போக்குகளை சமய நம்பிக்கைகள் கலைகள், வழிபாடுகள், இதிகாசச் செல்வாக்கு எனப் பிரித்து நோக்குவதற்கு பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் பாலித்தீவில் இன்றளவும் 98% இந்துக்கள் வாழ்ந்து வருவதோடு அவர்கள் இந்துசமயம்சார் பண்பாட்டு மரபுகள், கலைகள், வழிபாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பின்பற்றி வருகின்றனர். ஆரம்பகாலம் தொட்டுத் தற்காலம் வரையிலான பாலித்தீவின் பண்பாட்டு வளர்ச்சியில் இந்துசமயம் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்தியுள்ளமையினை அறியமுடிகின்றது.*


**திறவுச்சொற்கள்:** இந்துசமயம், பண்பாடு, பாலித்தீவு, வழிபாடுகள், நம்பிக்கைகள்

[1]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

Kirushakiru230@gmail.com

**அறிமுகம்**

சனாதன தர்மம் எனச் சிறப்பிக்கப்படும் இந்துசமயமானது பண்பாடு, கலை, வழிபாட்டு அம்சம், நம்பிக்கை என்பவற்றைக் கொண்டு விளங்கும் உன்னத நெறியாகும். இந்துசமயமானது பண்டைக்காலம் முதலாகவே இந்தியா உட்பட மேலைத்தேய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் தாக்கம் செலுத்தி வந்துள்ளது. தென்கிழக்காசியாவில் பரவிய இந்துப்பண்பாடு இந்தியாவிற்கு வெளியே உருவான பேரிந்தியப் பண்பாடு என்றும் அழைக்கப்படுகின்றது. இது பற்றி அறிந்து கொள்வதற்குத் தொல்பொருட்களான கட்டட இடிபாடுகள், பல்வேறு திருவுருவங்கள், தமிழ்மொழி மற்றும் வடமொழியிலான சாசனங்கள், முத்திரைகள் என்பனவும் இலக்கியச் சான்றுகளான இதிகாச புராணங்கள், வெளிநாட்டு யாத்திரீகர்களான பாஹீயன், யுவான்சுவாங், இத்சிங், பிளினி, தொலமி ஆகியோர்களின் குறிப்புகளும் மற்றும் இப்பிராந்தியத்திலுள்ள பல்வேறு பழக்கவழக்க நடைமுறைகளும் துணை புரிகின்றன. தென்கிழக்காசிய நாடுகளில் புராதன காலம் முதல் தற்காலம் வரையிலும் பல்வேறு நிலைகளிலான இந்துப்பண்பாட்டு மரபுகள் பேணப்பட்டு வருகின்றது. லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பர்மா, செலிபஸ், போர்ணியா, மலேசியா, ஜாவா போன்ற நாடுகள் தென்கிழக்காசிய நாடுகளாகும். தென்கிழக்காசியாவின் நாற்பெருந் தீவுகளில் ஒன்றாகவும் இந்தோனேசிய தீவுக் கூட்டங்களில் ஒன்றாகவும் விளங்கும் பாலித்தீவிலும் ஆரம்பகாலம் முதலாகவே இந்துசமயமும் அதன் பண்பாட்டுக் கூறுகளும் பரவி செல்வாக்குப் பெற்று வந்துள்ளன.

1952 இல் இந்தோனேசியா சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து அந்நாடு பாலி இந்துக்களை இஸ்லாம் சமயத்தைத் தழுவ வலியுறுத்தியதுடன் அவர்களை நெறியிலர் (சமயம் அற்றோர்) என வகைப்படுத்தத் தொடங்கினர். இதனால் ஆத்திரமடைந்த பாலிமக்கள் கெபத்தினன் என்ற பழங்குடியினருடன் சேர்ந்து தம்மைத் தனி நாடாகப் பிரகடனப்படுத்தவும் தங்களை இந்துவாக அறிவிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர். 1986இல் இந்தோனேசிய அரசு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியதுடன், பாலித்தீவு இந்துக்களைக் கொண்ட தனி அரசு என அறிவித்தது (கானா பிரபா, 2015:20). அக்காலம் முதல் தற்காலம் வரை பாலித்தீவில் இந்துசமயமும் அதன் பண்பாட்டு கூறுகளும் பெரும் செல்வாக்கினைப் பெற்று வந்துள்ளன.

“வர்த்தக வாணிப தொடர்புகள், இஸ்லாம் மத தாக்கம், தமிழ் மன்னர்களின் ஆட்சி, மக்களின் புலம்பெயர்வு, இதிகாச புராணங்களின் செல்வாக்கு, பாலித்தீவு தனி அரசாக அங்கீகாரம் பெற்றமை, கலைகளின் வளர்ச்சி” (கிருஷ்ணராஜா, 2011:12) போன்ற காரணங்களால் பாலித்தீவில் இந்துமதம் செல்வாக்குப் பெற்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களின் அதிகாரத்திற்கு உட்படும்வரை பாலித்தீவு ஒன்பது தனியரசுகளாகவே

விளங்கியது. இத்தனியரசுகள் யாவும் இந்து, இந்தியப் பண்பாட்டினைப் பறைசாற்றும் அரசுகளாக அமைந்திருந்ததை காணலாம்.

இந்து, இந்தியப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கொண்டு விளங்கும் பாலித்தீவானது மகாபலி என்ற அரசரை நினைவுபடுத்தும் முகமாக அமைந்த பெயர் என்று குறிப்பிடப்படுகின்றது. பாலித்தீவை கி.பி 914இல் கேசரிவர்மன் ஆண்டதாகவும், உக்கிரசேனன் கி.பி 915-942 வரை ஆட்சி செய்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. பின்னர் தபனேந்திர வர்மதேவன், சந்திர அபய சிங்கவர்ம தேவன் என நீண்ட இந்திய, இந்து அரச பரம்பரையே ஆண்டு வந்ததாக அறியமுடிகின்றது. பத்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பாலித்தீவை ஜாவா கைப்பற்றியதையடுத்து தருமவம்சன் என்ற அரசன் பாலியை ஆட்சி செய்தான். பின்னர் உதயணன் என்ற அரசன் அவருடைய மனைவி குணப்பிரியையுடன் இணைந்து ஆட்சி செய்ததாக வரலாற்று ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. பின்வந்த ஏரளங்கன் மன்னனுடைய ஆட்சியில் பாலித்தீவில் இந்துப் பண்பாடு ஆழமாக வேரூன்றியது (கானா பிரபா, 2015:20,21). பாலித்தீவின் சமய வரலாற்றில் கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் செல்வாக்கோடு இந்துசமயம் தழைத்தோங்கிய காலமாக கொள்ளப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் இந்து மன்னர்களால் ஆட்சிசெய்யப்பட்ட பாலித்தீவில் இன்றளவும் பெருவாரியான இந்துக்கள் வாழ்ந்து வருவதோடு அவர்கள் இந்துசமயம்சார் பண்பாட்டு மரபுகள், கலைகள், வழிபாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றினை பின்பற்றி வருகின்றனர்.

**வழிபாடும் சமய நம்பிக்கையும்**

பாலித்தீவின் மக்களிடையே வழிபாடும் சமய நம்பிக்கைகளும் இந்து சமயம் சார்ந்ததாகவே அமைகின்றன. பாலிநாட்டு மக்கள் சூரியன், பிரம்மா, விஷ்ணு, சிவன், துர்க்கை, முருகன், கணபதி, ஸ்ரீதேவி ஆகிய தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைத்துப் வழிபடுகின்றனர். சிவனை முதன்மைத் தெய்வமாகவும் பிரம்மா, விஷ்ணு சிவனுடைய மேலாண்மைக்குக் கட்டுப்படும் தெய்வங்களாகவும் வழிபடுகின்றனர். கடவுளின் வாகனங்களைத் தெய்வாம்சம் பொருந்தியதாக இம்மக்கள் நம்புகின்றனர். இயற்கை பொருட்களையும் கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். நிலம், நீர், காற்று, தீ, மலை போன்றவற்றை கடவுளாக எண்ணுகின்றனர். சூரியன் அவர்களுடைய முக்கிய தெய்வமாகும். சிவனுடன் இணைந்தவாறு துர்க்கை, நந்தி, விநாயகர் போன்ற கடவுளர்களை வழிபட்டுள்ளனர். விநாயகரை துவாரபாலகராக வழிபடும் மரபும் காணப்படுகின்றது. உமாதேவியை பர்வதராஜகுமாரியாகவும், காளியைப் பதினாறு கைகள் கொண்ட அறிவாற்றல் நிரம்பிய ரனதாவாக நினைத்து வழிபாடுகளை செய்கின்றனர். உழவு மற்றும் செல்வச் செழிப்பிற்குரிய தெய்வமாக இலக்குமியையும், அறிவு, கலைக்கான தெய்வமாக சரஸ்வதியையும் போற்றுகின்றனர். இம்

மக்கள் சரஸ்வதிதேவிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு சரஸ்வதி பூஜையை வருடாந்தப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். கல்விச்சாலைகள்தோறும் சரஸ்வதிதேவியின் சிலை வைத்து வழிபடுகின்றனர். சரஸ்வதிதேவியை வழிபட்டு மாணவர்கள் தம் நாளாந்தக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மக்கள் ஆலயத்திற்கு செல்லும்போது தென்னோலையில் செய்த பெட்டியில் பூக்களை நிறைத்து அவற்றை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றனர். சிவப்பு நிறப் பூக்கள் பிரம்மாவுக்கும், வெள்ளைநிறப் பூக்கள் சிவனுக்கும், பச்சை இலைகள் விஷ்ணுவுக்கும் என அர்ப்பணம் செய்கின்றனர். ஆலயங்களில் ஊதுவர்த்தி ஏற்றி வழிபடுகின்றனர். துர் ஆவிகளுக்கு இவ்வகையான அர்ப்பணிப்புக்களைச் செய்வதன் மூலம் அவற்றின் பிடியில் இருந்து தப்பமுடியும் என்பது அவர்களின் நம்பிக்கை. கோயில்களுக்குச் செல்லும்போது குறிப்பிட்ட உடையையே அணிய வேண்டும் என்பது மரபாகக் கருதப்படுகிறது. அத்தகைய உடைகளை அணியாதவர்கள் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆண்களும், பெண்களும் இடுப்பில் சால்வையைத் துணியால் இறுக்கமாகக் கட்டிக் கொள்ளவேண்டும். ஆலய வழிபாட்டில் ஈடுபடுவோர் மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தி மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வணங்க வேண்டும் என்பதற்காக இந்நடைமுறை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆடவர்கள் நெற்றியில் சந்தனமும், மகளிர் திலகமும் அணிகின்றனர். மேலும் வடமொழி, பாலிமொழி என்பவற்றில் மந்திரங்கள் ஓதப்படுவதுடன், நீரினை மும்முறை நிலத்தில் தெளித்து நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கும் மரபினையும் இம்மக்கள் கொண்டுள்ளனர்.

இந்துசமயப் பண்டிகைகள், விழாக்கள் என்பவற்றினை கொண்டாடுவதோடு அவற்றின் தத்துவங்களில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். பாலிமக்களால் 'Galungan' என்ற விழா கொண்டாடப்படுகின்றது. 'Galungan' என்பது தீபாவளி பண்டிகையைக் குறிக்கிறது (Frances Hawker, 2008:38). இது பத்து நாள் விழாவாகக் கொண்டாடப்படுவதுடன் அதர்மம் குன்றி தர்மத்தைத் தோற்றுவித்த விழா என்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

பாலிமக்கள் தமது அன்றாட வாழ்வியலின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் இந்துப் பண்பாட்டு அம்சங்களினையே பின்பற்றுகின்றனர். அன்றாடம் தொழில் நடவடிக்கைகளை இறைவணக்கத்துடனேயே ஆரம்பிக்கின்றனர். (பாலித்தீவு சுற்றுலாத் தலமாக விளங்குவதால் இங்கு சாலையோர கடைகள் ஏராளம்). கடைகளினை திறப்பதற்கு முன் பூக்கூடைகளுடன் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளைச் செய்கின்றனர். ஒவ்வொரு கடைகளிலும் "ஓம் பூர் புவஸ் ஸுவ" என்ற காயத்ரி மந்திரம் இடைவிடாது ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

மறுபிறப்புக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன் குடும்பத்தில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளைத் தமது மூதாதையரின் அம்சமாகக் கருதுகின்றனர். கருவுற்றது முதல் இறப்பு வரையில் பதின்மூன்று வகையான பூர்வக் கிரியைகளை மேற்கொள்கின்றனர். ஈமக்கிரியைகள், ஈமச் சடங்குகளிலும் இந்துசமயம்சார் நடைமுறைகளையே பின்பற்றுகின்றனர். இறந்தவுடன் உடலை எரிக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். ஈமக்கிரியைகளைச் செய்வதன் மூலம் ஆன்மா உடலில் இருந்து விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கை இம்மக்கள் மத்தியில் நிலவுகிறது. மயானங்களில் சுடலைக் கோயில்களை அமைத்துள்ளதுடன் அக்கோயிலை 'டலொங்' (கானாபிரபா, 2015:23) என அழைக்கின்றனர். 'Pura Delem' என்ற துர்க்கை ஆலயத்தில் ஈமச்சடங்குகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

பாலித்தீவு மக்கள் இறந்துவிட்ட தங்கள் மூதாதையர், பூதங்கள், பேய்கள் போன்ற தீய சக்திகளையும் போற்றி வழிபடுகின்றனர். இவற்றின் அருளைப் பெறப் பல சடங்குகளை மக்கள் செய்ய வேண்டும் என்பது அவர்களின் சமயக் கொள்கையாகும். நன்மை, தீமை, பாவ புண்ணியங்கள், மறுப்பிறப்புக் கொள்கைகளிலும் தீவிரமான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## பாலி தேசத்து இந்துக் கோயில்கள்

இந்துசமய மரபில் திருக்கோயில்கள் முக்கியமான இடத்தினை வகித்து வருகின்றன. இந்தியாவிலும், ஈழத்திலும் திருக்கோயில் வழிபாட்டு மரபு தோன்றி வளர்ந்ததைப் போன்று இந்துக்கள் எங்கெங்கு சென்று குடியேறி வாழ்ந்தார்களோ அவ்விடங்களில் எல்லாம் திருக்கோயில்களை அமைத்து வழிபடலாயினர். இந்திய, இந்துப் பண்பாட்டினைக் கொண்டு விளங்கும் பாலித்தீவிலும் பெருவாரியான கோயில்கள் காணப்படுகின்றது. மக்கள் தம்முடைய வழிபாடுகளை செய்வதற்கும், கலைநயத்தை வெளிபடுத்துவதற்கும் கோயில்களை அமைத்துள்ளனர். பாலிமக்கள் கோயில்களை கூயில் என்று அழைக்கின்றனர். "பாலித்தீவில் சிறியதும், பெரியதுமாக 4661 கோயில்கள் இருப்பதாக ஜே.எல்.ஸ்வெல்லன் கிரிபஸ் என்னும் அறிஞர் கணக்கிட்டுள்ளார்" (கிருஷ்ணராஜா,செ., 2011:74).

பிரம்மா, விஷ்ணு, சிவன், துர்க்கை, முருகன், கணபதி, ஸ்ரீதேவி ஆகிய தெய்வங்களுக்குக் கோயில்களை மிகுந்த கலைநுட்பத்துடன் அமைத்துள்ளனர். சிவனுக்குரிய கோயில்களில் பதினொரு மாடங்களைக் கொண்ட விமானமும், கலசமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிற தெய்வங்களுக்கு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது எனும் எண்ணிக்கையிலான மாடங்களைக் கொண்ட விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில்களில் காவலுக்காக துவாரபாலகர் சிலைகளை வைத்து வழிபடும் மரபும் காணப்படுகின்றது.

பாலித்தீவில் பெருவாரியான இந்து ஆலயங்கள் காணப்படுகின்றது. அவற்றில் 1634இல் அமைக்கப்பட்ட 'Taman Tayun Mengwi Royal Kingdom Temple' ஆலயம் சிறப்பானது. கோயிலைச் சுற்றி காணப்படும் அகழிகளானது அரண்கள் போல் காட்சியளிப்பதுடன், பல அடுக்குகளாகவும் இவ் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் மூல மூர்த்தி "இஷ்ட தேவதா" எனப்படும் விஷ்ணு பகவான். இவ் ஆலயம் "Pura Taman Ayun" என்றும் அழைக்கப்படுகின்றது. நீருக்குள் அமைந்திருக்கும் பூங்கா ஆலயம் என்பது இதன் பொருள். தீய ஆவிகளிடமிருந்து பாலித்தீவினை காப்பாற்றும் பொருட்டு இவ் ஆலயம் அமைக்கப்பட்டதாக மக்கள் நம்புகின்றனர். ஏழு அடுக்குகளைக் கொண்ட மேருமலையை நினைவுபடுத்தும் அமைப்பு ஒன்று இக் கோயிலின் வலது புறத்தே காணப்படுகின்றது. 1937ஆம் ஆண்டு இவ்வாலயம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இந்த ஆலயத்தில் சேவலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் கோயிலின் முகப்பு மண்டபத்தில் சேவல் சண்டையைப் பிரதிபலிக்கும் ஓவியம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது.

பாலித்தீவின் புகழ்பெற்ற ஆலயங்களில் "Water Temple" ஆலயமும் ஒன்றாகும். 1663இல் கடல் நடுவே அமைக்கப்பட்டது. பாலித்தீவு விவசாயத்தை மூலாதாரமாகக் கொண்டு இயங்குவதால் நீருக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து "தேவி தனு" என்ற நீர்நிலைத் தெய்வத்திற்கான ஆலயமாகக் கொள்ளப்படுகின்றது. தேவி தனு என்ற பெண் தெய்வம் அம்மக்களின் உயரிய கடவுளர்களில் ஒருவராவார். இந்த ஆலயத்தில் பதினொரு அடுக்குகள் கொண்ட விமானம் சிவன், பார்வதிக்கென அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் சிறுமாடம் ஒன்றில் இலக்குமி, காளி, சரஸ்வதி போன்ற தெய்வங்களின் உருவப்படங்கள் காணப்படுகின்றன.

பாலி மக்கள் யாத்திரை செல்வதற்கான ஆலயங்களினையும் அமைத்துள்ளதுடன் யாத்திரை செல்லும் வழக்கத்தினையும் கொண்டுள்ளனர். "Pura Tanah lot" யாத்திரைக்கு சிறப்பாக அமைந்த ஆலயமாகும். இவ்வாலயம் உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் என்பவற்றினை கொண்டு காணப்படுவதுடன் மாலை வேளைகளில் விசேட பூஜைகள் இடம்பெறுகிறது. பூசகர் மந்திரங்களை ஓதும் வேளையில் ஆண்களும், பெண்களும் தரையிலிருந்து வழிபாட்டை மேற்கொள்கின்றனர். இது "Bhatara Segara"(கானா பிரபா, 2015:35) எனப்படும் கடலுக்கு அதிபதியான தெய்வத்தின் ஆலயமாகும். இவ்வாலயத்தில் பாறைகள் அதிகமாக அமைந்துள்ளதுடன் அப்பாறைகளில் உள்ள பாம்புகள் ஆலயத்தினைக் காவல் செய்வதாக நம்பப்படுகின்றது. 16ஆம் நூற்றாண்டளவில் பாலிக்கு வந்த Pedanda Shakti Waws என்ற இந்து மதகுருவானவர் இவ்வாலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததோடு பல்வேறு இடங்களில் இந்து மத பிரசாரங்களையும் செய்துள்ளார்.

பாலிமக்கள் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு என்று வெவ்வேறு ஆலயங்களை அமைத்து வழிபடும் மரபினைப் பின்பற்றி வந்துள்ளனர். "Tanah lot" என்ற பகுதியில் எட்டு புனித ஆலயங்கள் ஒவ்வொரு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. (கானாபிரபா, 2015:38-41)

- ❖ Penataran ஆலயம் - சுகதேகி மற்றும் மகிழ்ச்சியான வாழ்வு
- ❖ Penyawang ஆலயம் - வாழ்வின் சம பலன்களைப் பெறுதல்
- ❖ Jerokandang ஆலயம் - கால்நடை, வேளாண்மை செழிப்பு
- ❖ Enjunggaluh ஆலயம் - சக்தி தேவியின் அருளை பெறுதல்
- ❖ Batubolog ஆலயம் - தூய்மையான சடங்குகளை மேற்கொள்ளல்
- ❖ Batumejan ஆலயம் - தீய செயல்களிலிருந்து விடுபடுதல்
- ❖ Pekedungan ஆலயம் - தியானம் மேற்கொள்ளல்

1980இல் இவ்வாலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தற்போது பெருவாரியான உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது.

"Pura Taman Saraswati Temple" பாலித்தீவின் பிரமாண்ட ஆலயம் என்று போற்றப்படுகிறது (திருநாவுக்கரசு, 1987:74). இம்மக்கள் சரஸ்வதி தேவிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு, சரஸ்வதியைக் கல்விக்கு அதிபதியாகவும் போற்றுகின்றனர். இவ்வாலயத்தில் சரஸ்வதி பூஜை வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. புராதனமான சரஸ்வதி ஆலயம் உபுட் இராசதானியின் இளவரசரின் வேண்டுகோளிற்கு இணங்க கட்டட, ஓவிய கலைஞரான I Gusti Nyomon Lempad என்பவரால் 1959ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஆலயத்தின் முகப்பு வாயிலில் பிரமாண்டமான சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பாலித்தீவின் சிறப்புப் பெற்ற கோயில்களில் "Goagajah" என்ற யானைக் குகைக் கோயிலும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் முகப்பு மண்டபத்தையடுத்து ஒரு நீர்த் தடாகம் காணப்படுவதுடன் அதனை புனித தீர்த்தமாகக் கருதுகின்றனர். இவ்வாலயத்தில் அசூரனின் வாய் போன்ற குகை ஒன்றினுள் இருக்கும் கருவறையில் சிவலிங்கங்கள் வைத்து பூஜிக்கப்படுகின்றன. பிள்ளையாருக்கு சிலைகள் வைத்து வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது கிட்டத்தட்ட 700 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயமாகும். இவ்வாலயத்தில் சிவனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளை புத்தரையும் வைத்து வழிபடுகின்றனர். ஆலய வளாகம் நுட்பமான கட்டட, சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுவதனால் 1995 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலகப் பாரம்பரியமிக்க பகுதிகளில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டது.

Tampaksiring என்ற இடத்தில் காணப்படும் (Tampaksiring Temple) புனித தீர்த்த தலமானது பரிசுத்த நீரினைக் கொண்ட ஆலயமாகக் கருதப்படுகின்றது. இவ்வாலயத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆண்கள், பெண்கள் நீராடி, ஈர உடையுடன் தம்முடைய பிரார்த்தனைகளை மேற்கொள்ளுகின்றனர். இதன் மூலம் தம்முடைய மனதிலும் உடலிலும் உள்ள அழுக்கு நீங்கித் தூய்மை பெறுவதாக நம்பிக்கை கொள்கின்றனர். மூல விக்கிரகமாக சிவலிங்கமும் சக்தியினுடைய வாகனமான சிங்கத்தினுடைய உருவச் சிலையும் காணப்படுகின்றன. பாலிமக்கள் இவ்வாலயத்தில் வழிபாட்டை சிரத்தையோடு மேற்கொள்வதோடு கோயிலுக்குச் செல்லும்போது பூஜைப் பொருட்களை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாலயம் தேவேந்திரன் என்பவரால் உருவாக்கப்பட்டது என்றும் அதற்குத் தலவரலாறு காணப்படுவதாகவும் அம்மக்கள் நம்புகின்றனர். இவ்வாலயத்துடன் தொடர்புடைய விழாக்கள், ஐதீகக் கதைகள் என்பன காணப்படுகின்றது.

பாலிமக்கள் திரிமூர்த்திகளை அறிந்து வைத்துள்ளதோடு அவர்களுக்கான வழிபாட்டையும் மேற்கொண்டுள்ளனர். உபுட் நகரத்தின் Batuan என்ற இடத்தில் திரிமூர்த்திகளுக்கான ஆலயம் அமைந்துள்ளது. பாலிமக்கள் இவ்வாலயத்தை "Tri Khayangam" (கானா பிரபா, 2015:74) என அழைக்கின்றனர். இவ்வாலய வளாகத்தின் உள்ளே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் (சிவன்) ஆகியோருக்கு முறையே "Village Temple, Puresh Temple, Delem Temple" போன்ற சிறு கோயில்கள் அமையப்பெற்றுள்ளன. திரிமூர்த்தி ஆலயத்தின் உள்ளே செல்லும்போது ஆண்களும் பெண்களும் வேட்டி, சேலை போன்ற உடைகளை அணிந்து செல்லவேண்டும் என்பது நியதியாகக் காணப்படுகின்றது. இவ்வாலயங்கள் உள்பக்கம், வெளிப்பக்கம், மூலஸ்தானம் என்று பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஆறு மாதத்திற்கு ஒருமுறை திருவிழாவும் நடாத்தப்படுகின்றது. ஆலயத்தைச் சுற்றி கஜமுகம் தரித்த சிற்பங்கள், துவாரபாலகர்களின் சிலைகள் அமைந்துள்ளன. ஆலயத்தின் முகப்பில் மிகப் பெரிய விஷ்ணு சிலை ஒன்று காணப்படுகின்றது. இங்கு விஷ்ணு வழிபாட்டுடன் இணைந்தவாறு கருட வழிபாடும் இடம்பெறுகின்றது.

கோயில்களின் தீவு என அழைக்கப்படும் பாலித்தீவில் பெருவாரியான இந்து ஆலயங்கள் அமையப் பெற்றுள்ளதுடன் அவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்று வழிபாட்டிற்குரிய இடமாகவும் காணப்படுகின்றது. பாலித்தீவின் ஆலயங்களானது மாறுபாடுகளுடன் கூடிய கட்டட அமைப்பு, கலைவண்ணத்தில் அமையப்பெற்றுள்ளதுடன் தற்காலத்தில் சுற்றுலாத் தளங்களாகவும் விளங்குகின்றன.

## கலை மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற பல்வேறான விடயங்களில் இந்துசமய வெளிப்பாடு

பாலித்தீவு மக்கள் கலை மற்றும் கைவினைப் பொருட்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர்கள். ஓவியம், நடனம், சிற்ப வேலைப்பாடுகள் என்பவற்றில் இந்துசமயப் பண்பாடு, மரபுகளைப் பேணி வருகின்றனர். பாலித்தீவில் இந்துசமயம்சார் கலை மற்றும் கைவினைப் பொருட்களின் உருவாக்கத்தில் உபுட் நகரம் சிறந்து விளங்குகின்றது. சிவன், சரஸ்வதி, விஷ்ணு போன்ற தெய்வங்களின் சிலைகளை மண்ணாலும், மரத்தாலும், செம்பு போன்ற உலோகங்களினாலும் உருவாக்குகின்றனர். கைவினைப்பொருட்களில் பிள்ளையாருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அவரை கணேஷா என்ற பெயரில் தமது அறிவு மற்றும் செல்வத்தின் கடவுளாக வழிபடுவதுடன் கைவினைப் பொருட்களில் பிள்ளையாரின் உருவங்களை மத்தளம் அடிக்கும் பிள்ளையார், கிட்டார் வாசிக்கும் பிள்ளையார், நடனமாடும் பிள்ளையார் எனப் பல்வேறான நிலைகளில் வடிவமைக்கின்றனர்.

பாலித்தீவில் காணப்படும் ஓவியக் கூடங்கள், அருங்காட்சியகங்கள், கடைகள், புத்தக சாலைகள் என்பவற்றிற்கு இந்துத் தெய்வங்களின் பெயர்களையே வைக்கின்றனர். உதாரணமாக ஓவியக் கூடம் ஒன்றிற்கு ‘‘மடே ராமா’’ என்றும், புத்தகசாலை ஒன்றிற்கு ‘‘கணேஷா’’ என்றும் பெயர்களை வைத்துள்ளனர் (கானா பிரபா, 2015:44). மேலும் கலைப் படைப்புகளில் இராமன், லக்ஷ்மணன், சீதை, கருடன், விஷ்ணு ஆகியோரின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. விஷ்ணுவின் ஜதீகக் கதைகள், புராணக் கதைகள் என்பவற்றை சுவர்களிலும், மரவேலைப்பாடுகளிலும் செதுக்கி வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது.

தமது உணவு பழக்கவழக்கத்தில் சைவ உணவுகளைச் சேர்த்துக் கொள்வதோடு அதனைத் தம்முடைய பாரம்பரியமாகவும் கருதுகின்றனர். பாலித்தீவின் பாரம்பரிய நடனங்களில் இந்துசமயச் செல்வாக்கு பெரிதும் காணப்படுகின்றது. வேளாண்மையை தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு காணப்படும் இம்மக்கள் நெல் விதைப்பதிலிருந்து அறுவடைக் காலம் வரையுள்ள வாழ்வியல், காதல், வீரம் என்பவற்றின் கூறுகளை நடனங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றனர். பாரம்பரிய இசையுடன் நடனங்களை மேற்கொள்ளுகின்றனர். உதாரணமாகப் பாலித்தீவில் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் என்பவற்றின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுவதனால் அதனோடு தொடர்புடைய பல்வேறு நடனங்கள், நாடகங்களை இசையுடன் அரங்கேற்றுகின்றனர். நடனமாந்தர்கள் இராமாயண, மகாபாரதக் கதைமாந்தர்களின் பாத்திரங்களினை ஏற்று நடிக்கின்றனர். நடனமாந்தர்கள் இசைக்கருவிகளுடன் காட்சி அளிப்பதுடன் இசைக்கருவிகளை இசைத்தவாறு நடன, நாடகங்களை அரங்கேற்றுகின்றனர்.

இங்கு ‘‘கெச்சா’’ என்ற வானர நாட்டியம் பிரசித்தமானது. (கானா பிரபா, 2015:46) இந்நாட்டியத்தில் இராமாயணத்தில் வானரப்படை இராவணனிடமிருந்து சீதையை மீட்க எவ்விதம் உதவியது என்ற வரலாற்றைக் காட்சிப்படுத்தப்படுகின்றது. இந்நடனத்தில் சீதை, இராமன், இராவணன் ஆகிய பாத்திரங்களை ஏற்றவர்கள் மிகுந்த அலங்காரத்துடன் காட்சியளிக்கின்றனர். இங்கு நடைபெறும் “Barong & Krish” நடனமானது மகாபாரதக் கதையினை சித்தரிப்பதாக உள்ளது. இது சகாதேவனின் பிறப்பு, அவனது வளர்ப்புத்தாய் குந்தி பற்றிய நடனமாகும். மேலும் விஷ்ணுவின் புராண கதைகள் நடன, நாடக வடிவிலும் அரங்கேற்றப்படுகின்றன. தம்முடைய கலை மற்றும் நடன செயற்பாடுகளில் இந்துசமய பண்பாட்டு அம்சங்களினையே பின்பற்றி வருகின்றனர்.

### பாலித்தீவில் இதிகாசச் செல்வாக்கு

பாலித்தீவு மக்கள் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் பெருவாரியாகப் போற்றுகின்றனர். கடைகள் மற்றும் அருங்காட்சியகங்கள் என்பவற்றிற்கு இதிகாசப் பெயர்களை வைப்பது இங்கு மரபாகக் காணப்படுகின்றது. மேலும் இதிகாசக் கதைகளை பாத்திரம் ஏற்று நடிக்கவும் செய்கின்றனர். பாலிமக்கள் மகாபாரத அறக்கருத்துக்களில் நம்பிக்கை கொண்டு காணப்படுவதுடன் “கெச்சா” என்ற இராமாயண நடனத்தையும் தம்முடைய பாரம்பரிய நடனமாகக் கொள்கின்றனர். இந்நடனத்தினை ஒவ்வொரு பகுதிகளாகப் பிரித்துக் குறித்த தினத்தில் அரங்கேற்றி வருகின்றனர். தம்முடைய குழந்தைகளுக்கு இராமன், சீதை, இலக்குவன், ஆஞ்சநேயர் என்று இதிகாசக் கதைமாந்தர்களின் பெயர்களை வைக்கின்றனர். ஆலயங்களின் முகப்பு வாசல்களில் பீமன், அர்ச்சுனனின் பிரமாண்டமான சிலைகள் அமைந்துள்ளன. உபுட் என்ற நகரத்தில் வாரத்தின் இறுதி தினங்களில் இராமாயணம், மகாபாரதத்தை மையப்படுத்திய ஆடல் நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. அருங்காட்சியகங்களில் மகாபாரதம் சார்ந்த ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பாலித்தீவில் இதிகாசங்கள் மக்கள் மத்தியில் எத்தகைய செல்வாக்குப் பெற்றுள்ளன என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

### முடிவுரை

தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றாக விளங்கும் பாலித்தீவில் புராதன காலம் முதலாகவே இந்திய, இந்துப் பண்பாட்டு அம்சங்கள் நன்கு பரவிச் சிறப்பு பெற்று வந்துள்ளன. குறிப்பாக பாலித்தீவில் இந்தியக் குடியேற்றமானது கி.பி ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்து சமயமும் அதன் பண்பாட்டு கூறுகளும் அம்மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்று வளர்ச்சி கண்டன. வர்த்தக வாணிபத் தொடர்புகள், இஸ்லாம் மதத் தாக்கம், தமிழ் மன்னர்களின் ஆட்சி, மக்களின் புலம்பெயர்வு, இதிகாச

புராணங்களின் செல்வாக்கு, பாலித்தீவு தனி அரசாக அங்கீகாரம் பெற்றமை, கலைகளின் வளர்ச்சி போன்றவை பாலித்தீவில் இந்து, இந்தியப் பண்பாட்டு அம்சங்கள் வேரூன்றுவதற்கு மிக முக்கிய காரணிகளாக அமைந்தன. பாலித்தீவு மக்கள் தம்முடைய சமய நம்பிக்கை, வழிபாடுகள், கலைகள், கலாசாரம், இலக்கியம் போன்ற பல்வேறான விடயங்களில் இந்து சமய நடைமுறைகளையே பின்பற்றி வருகின்றனர். இந்துசமய நடைமுறைகள், வழிபாடுகளில் பெரும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். கோயில்களின் தீவு என்று அழைக்கப்படும் அளவிற்கு பெருவாரியான ஆலயங்களும் இங்கு காணப்படுகின்றன. அவ்வாலயங்களில் தம்முடைய வழிபாடுகளைச் செய்து வருவதோடு அவற்றினைப் பேணிப் பாதுகாத்தும் வருகின்றனர். இன்றளவும் இந்து மதத் தொன்மங்கள், இந்துமத விழுமியங்களைச் சிறப்பாகக் கொண்டு விளங்கும் நாடாக பாலித்தீவு விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

## உசாத்துணை நூல்கள்

கிருஷ்ணராஜா, செ., (2011), தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

திருநாவுக்கரசு, க., (1987), தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலக தமிழராய்ச்சி நிறுவனம்.

கானா பிரபா, (2015), பாலித்தீவு, மடத்துவாசல் பதிப்பகம், அவுஸ்திரேலியா.

Frances Hawker, (2008), Hinduism in Bali, Cherrytree book, London.

Robert Pringle, (2004), A Short History of Bali: Indonesia’s Hindu Realm (A short History of Asia series)